**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாய கூலி வேலை |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 19.02.2026 | | | |

**13 ஆவது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

13 ஆவது பிரதிவாதியான அந்தோணி சகாயராஜ் உங்கள் அத்தை மகன் என்றால் சரிதான். உங்கள் தந்தையுடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால் 3 பேர் ஆவார்கள். அவர்கள் சந்தியாகம்மாள், மரிய புஷ்பம் (12 ஆம் பிரதிவாதி) , ஜெர்மன் (1 ஆம் வாதி) ஆகியோர் ஆவார்கள். அந்தோணி சகாயராஜ் இறந்த சந்தியாகம்மாளின் மகன் என்றால் சரிதான். உங்கள் தந்தைக்கு 1 ஆம் வாதி ஜெர்மன் இளைய சகோதரி என்றால் சரிதான். 13 ஆம் பிரதிவாதியின் தாயார் சந்தியாகம்மாளை உள்ளூரில் தான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். உங்களின் தோட்டமும், சந்தியாகம்மாள் தோட்டமும் பக்கம் பக்கம் தான் என்றால் சரிதான். சந்தியாகம்மாள் உங்களின் அனைத்து விசேசங்களிலும் பங்கெடுத்து கொள்வார் என்றால் சரிதான். 13 ஆம் பிரதிவாதியின் சந்தியாகம்மாள் உயிரோடு இருக்கும் வரை தாவா சொத்தில் எந்தவொரு பாகமும் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இருதயத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை இரண்டு ஆண் மக்கள் மட்டும் பிரித்து கொள்ள வேண்டும் என்று சந்தியாகம்மாள் விரும்பினார் என்றால் சரிதான். சந்தியாகம்மாள் அவரது திருமணத்திற்கு பிறகு தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 30.11.1969 ஆம் தேதி ஊர் முக்கியஸ்தர் முன்னிலையில் பஞ்சாயத்து முச்சலிக்கா ஏற்படுத்திக் கொண்ட

போது பிரதிவாதிகளின் தாயார் சந்தியாகம்மாள் உடன் இருந்தாரா என்றால் உடன் இருந்ததாக என் அம்மா என்னிடம் சொல்லியுள்ளார். அந்த காலங்களில் ஊர் பஞ்சாயத்துகளில் பெண்கள் கையொப்பம் செய்ய மாட்டார்கள், அது போல தான் இந்த பிரதிவாதிகளின் தாயார் சந்தியாகம்மாள் மேற்சொன்ன முச்சலிகாவில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகளின் தாயார் சந்தியாகம்மாளின் விருப்பப்படியே தாவா சொத்துக்களை மேற்படி மாங்குடியார் இருதயத்தின் வாரிசுகளான அந்தோணி மற்றும் மரியசூசை வாரிசுதாரர்கள் இரண்டு பேர்கள் மட்டுமே சொத்துக்களை பிரித்து கொள்ள இந்த பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை என்று கூறுகிறார்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor